சுருக்கம்

வேளாண்மை - உழவர் நலத் துறை – 2022-2023 - ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை - மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு - அனைத்து மாவட்டங்களிலும் வேளாண்மை விரிவாக்க மையங்களில் புதிய மின்னணு தொழில்நுட்பங்களை பயன்படுத்தி பணமில்லா பரிவர்த்தனை முறையினை செயல்படுத்துதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை - உழவர் நலத் (வே.உ_2) துறை

திருவள்ளுவர் ஆண்டு 2053, சுபகிருது, வைகாசி மாதம் 16-ம் நாள்

அரசாணை (டி) எண்.128 நாள். 30.05. 2022

படிக்கப்பட்டது:

வேளாண்மை இயக்குநரின் கடித எண். த.தொ.5/ 138472 / 2019, நாள் 29.03.2022 (ம) 06.05.2022.

---

ஆணை:

மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தமிழக சட்டமன்றப் பேரவையில், கடந்த 19.03.2022 அன்று தாக்கல் செய்த 2022-23-ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் வேளாண்மை விரிவாக்க மையங்களில் புதிய மின்னணு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பணமில்லா பரிவர்த்தனை முறை செயல்படுத்தப்படும் என்பதை உறுதி செய்யும் நோக்கத்தில் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

அறிவிப்பு எண். 36 (பத்தி எண்.11 (x)

"விவசாயிகள் வேளாண் விரிவாக்க மையங்களில் இடுபொருட்களைப் பெறும்போது, தங்கள் பங்களிப்புத் தொகையினை இ-சலான், கிரெடிட் கார்ட், டெபிட் கார்ட், ஒருங்கிணைந்த பணப் பரிவர்த்தனை (UPI) மூலம் செலுத்த வழிவகை செய்யப்படும். இத்திட்டம், முதற்கட்டமாக மாவட்டத்திற்கு ஒரு வட்டாரத்தில் செயல்படுத்தப்படும்."

2. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மேற்குறிப்பிட்ட அறிவிப்பினை செயல்படுத்துதல் தொடர்பாக, வேளாண்மை இயக்குநர் பார்வையில் படிக்கப்பட்ட தனது 29.03.2022 நாளிட்ட கடிதத்தில்

கீழ்க்காணும் கருத்துருவினை அனுப்பியுள்ளார்:-

- உழவர்கள் நலன் சார்ந்த ஒன்றிய மற்றும் மாநில அரசுத் திட்டங்களை வேளாண்மைத் துறை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. அரசுத் திட்டங்கள் மூலம், தரமான வேளாண் இடுபொருட்கள் சரியான பயனாளிகளைச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில், மானிய விலையில் வேளாண் இடுபொருட்களை வேளாண்மைத் துறை நேரடியாக வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் வழங்கி வருகிறது. தமிழ்நாட்டில் 880 வேளாண் விரிவாக்க மையங்கள் செயல்பட்டு வருகின்றன.
- அகில இந்திய அளவில், தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, 2010-2011-ஆம் ஆண்டு முதல், தகவல் தொழில்நுட்பத்தில் முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. முதற்கட்டமாக 70 இலட்சம் விவசாயிகள் வாரியான தரவுகள் வலைதளத்தில் உள்ளீடு செய்யப்பட்டு, அனைத்து வகையான சேவைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, வேளாண் விரிவாக்க மையங்களில் ஆண்டு தோறும் மின்னணுப் பட்டியல் மூலம், 15 இலட்சம் விவசாயிகள் பயிர்ச் சாகுபடி செய்வதற்குத் தேவையான இடுபொருட்களைப் பெற்று வருகின்றனர். தற்போது, இதற்கான விவசாயியின் பங்களிப்புத் தொகையினைப் பணமாக செலுத்தி வருகின்றனர்.
- தற்போது, அனைத்துத் துறைகளிலும் பணமில்லாப் பரிவர்த்தனை அதிக அளவில் பயன்பாட்டில் உள்ளது. மேலும், அரசின் செயல்பாடுகளின் மீதும் மக்களுக்கு அதிக நம்பிக்கையை பணமில்லா பரிவர்த்தனை உருவாக்கியுள்ளது.

இதுதொடர்பாக, வேளாண்மை இயக்குநர் கீழ்க்கண்ட கூடுதல் விவரங்களையும் அரசுக்குத் தெரிவித்துள்ளார் :-

i. விரிவாக்க மையத்தின் நிதிச்செயல்பாடுகள் பெருநிறுவன சமூகப் பொறுப்புணர்வு (Corporate Social Responsibility- CSR) அடிப்படையில் Axis வங்கி நிறுவனம் மூலம் பரிட்சார்த்த முறையில் செயல்படுத்தப்படும்.

ii. பணமில்லாப் பரிவர்த்தனை மூலம் பெறப்படும் தொகையினை அரசுக் கணக்கில் அதற்கேற்ற கணக்குத் தலைப்பில் e-challan மூலம் வரவு வைக்கப்படும்.

iii. இச்சேவையினை வழங்குவதற்கு Axis வங்கி நிறுவனம் வழங்கவுள்ள வங்கி பெரு நிறுவன சமூகப் பொறுப்புணர்வு (CSR) மூலம் பரிட்சார்த்த

முறையில் செயல்படுத்தப்படவுள்ளது. இதற்கான சேவைத் தொகை மற்றும் கருவிகள் வாங்குவதற்கான தொகையை Axis வங்கியே ஏற்றுக் கொள்ளும்.

iv. விரிவாக்க மையப் பணியாளர்கள் பணமில்லா பரிவர்த்தனை முறையை செயல்படுத்துவதற்கான பயிற்சி வழங்கப்பட்டு, Point of Sales (POS) கருவிகள் அல்லது UPI payment gateway மூலம் பணப்பரிவர்த்தனை மேற்கொள்ளப்படும். பணமில்லாப் பரிவர்த்தனை Axis வங்கி நிறுவனம் மூலம் பெருநிறுவன சமூகப் பொறுப்புணர்வு (CSR) அடிப்படையில் செலுத்தப்படும்.

3. மேலும், சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் தலா ஒரு வட்டாரம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவ்வட்டாரத்தில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களில் பெரு நிறுவனங்களின் சமூகப் பொறுப்புணர்வு அடிப்படையில் தன்னார்வமாக வரும் தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கி உதவியுடன் பணமில்லாப் பரிவர்த்தனை முறையை 2022-2023-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்திடவும், பணமில்லா பரிவர்த்தனை முறை எனும் இத்திட்டத்தினைச் செயல்படுத்திட நிதி ஆதாரம் ஏதும் தேவையில்லை எனவும் குறிப்பிட்டு வேளாண்மை இயக்குநர் அரசின் ஆணையினை வேண்டியுள்ளார்.

4. மேற்காணும் சூழ்நிலையில், 2022-23 ஆம் ஆண்டின் வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கு செயல் வடிவம் தரும் விதமாக, வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலினை செய்து ஏற்று, சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் தலா ஒரு வட்டாரம் தேர்ந்தெடுக்கப்பட்டு, இத்துடன் இணைக்கப்பட்ட மாவட்ட வாரியான வேளாண்மை விரிவாக்க மையங்களில், பெரு நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு (Corporate Social Responsibility) அடிப்படையில் தன்னார்வமாக வரும் தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கி உதவியுடன் இடுபொருட்களைப் பெறுவதற்கு பணமில்லாப் பரிவர்த்தனை முறையை 2022-2023-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்திடலாம் என அரசு கருதி அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சென்னை-5

இயக்குநர்,தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை,
சென்னை-5.

கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர், சர்க்கரைத்
துறை, சென்னை-35

இயக்குநர்,வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்
துறை, சென்னை-32.

தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்),
சென்னை -35.

செயல் இயக்குநர், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு
முகமை, சென்னை-32.

பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.

இயக்குநர், விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று துறை,
கோயம்புத்தூர்-13.

நகல்

மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்
அவர்களின் முதுநிலை தனிச் செயலர், சென்னை-9.

உதவி நிரலர், வேளாண்மை- உழவர் நலத் துறை, சென்னை-9.

உதிரி/இருப்புக் கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

30/5/2022
பிரிவு அலுவலர்

# இணைப்பு

(அரசாணை (டி) எண்.128, வேளாண்மை - உழவர் நலத் (வே.உ2) துறை நாள்.30.05.2022)

2022-23-ஆம் ஆண்டில் பணமில்லா பரிவர்த்தனை மேற்கொள்ளப்படும் மாவட்ட வாரியான வேளாண் விரிவாக்க மைய விவரம்:-

| வ.எண் | மாவட்டம் | வேளாண் விரிவாக்க மையம் |
|---|---|---|
| 1 | விழுப்புரம் | மயிலம் |
| 2 | கள்ளக்குறிச்சி | கள்ளக்குறிச்சி |
| 3 | சேலம் | சேலம் |
| 4 | தர்மபுரி | தர்மபுரி |
| 5 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி |
| 6 | கடலூர் | கடலூர் |
| 7 | காஞ்சிபுரம் | சிறுகாவேரிபாக்கம் |
| 8 | செங்கல்பட்டு | மதுராந்தகம் |
| 9 | வேலூர் | குடியாத்தம் |
| 10 | இராணிப்பேட்டை | ஆற்காடு |
| 11 | திருப்பத்தூர் | திருப்பத்தூர் |
| 12 | திருவள்ளூர் | சோழவரம் |
| 13 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| 14 | அரியலூர் | அரியலூர் |
| 15 | கோயம்புத்தூர் | பொள்ளாச்சி (வடக்கு) |
| 16 | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 17 | ஈரோடு | கோபிச்செட்டிபாளையம் |
| 18 | கன்னியாகுமரி | இராஜாக்கமங்கலம் |
| 19 | கரூர் | கரூர் |
| 20 | மதுரை | திருமங்கலம் |
| 21 | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் |
| 22 | நாமக்கல் | திருச்செங்கோடு |
| 23 | நீலகிரி | நீலகிரி |
| 24 | பெரம்பலூர் | பெரம்பலூர் |
| 25 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை |
| 26 | இராமநாதபுரம் | இராமநாதபுரம் |
| 27 | சிவகங்கை | சிவகங்கை |

| | | |
|---|---|---|
| 28 | தென்காசி | தென்காசி |
| 29 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 30 | தேனி | பெரியகுளம் |
| 31 | திருநெல்வேலி | பாளையங்கோட்டை |
| 32 | திருவாரூர் | திருவாரூர் |
| 33 | தூத்துக்குடி | கோவில்பட்டி |
| 34 | திருப்பூர் | அவிநாசி |
| 35 | திருச்சி | திருவெறும்பூர் |
| 36 | விருதுநகர் | விருதுநகர் |
| 37 | மயிலாடுதுறை | மயிலாடுதுறை |

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசுச் செயலாளர்**

**//உண்மை நகல்//**

30/5/2022
பிரிவு அலுவலர்
30/5/22